**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | SC. No.57/2023 | அரசுத்தரப்பு சாட்சி P.W.10 |
| பெயர் | திருப்பதி | கிராமம் |
| தகப்பனார் பெயர் | அருணாச்சலம் | வட்டம் |
| வயது | | மாவட்டம் |

Solemnly affirmed by Thiru.P.Manikanda Prabu, Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 01.07.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.

Aadhar card of the Witness verified.

எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் புதுக்கோட்டை மாவட்டம் பி.மாத்துரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனக்கு மாமா முறையாகும். 10.01.2022ம் தேதி விடியற்காலை 05.00 மணியளவில் இச்சடியில் உள்ள பேக்கரி கடையில் டீ குடித்துகொண்டிருந்தோம். பழனிச்சாமியை போலிசார் அங்கு வைத்து விசாரணை செய்தார்கள். நான் பக்கத்தில் நின்று கொண்டிருந்தேன். பழனிச்சாமி அண்ணனை வெட்டிவிட்டதாக சொல்லி வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் கணேசன் என்பவரும் கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்துஎன்னுடையது ஆகும். அது அ.சா.ஆ.6. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியின் கடலைதோட்டத்தில் உள்ள கீத்து கொட்டகையில் இருந்து கத்தியை எடுத்து ஆஜர் செய்தார். அதை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து போலிசார் கைப்பற்றினார்கள். அதில் நானும் கணேசன் என்பவரும்கையெழுத்து செய்தோம். கைப்பற்றுதல் மகசரில் உள்ள என்னுடைய 2வது கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.7. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் டீ குடிக்க போகும் போது அந்த கடையில் சுமார் 25 நபர்கள் இருப்பார்களா என்று கேட்டால் சுமார் 10 அல்லது 15 நபர்கள் இருந்தார்கள். டீக்கடை அமைந்துள்ள

இடம் தஞ்சாவூர் - புதுக்கோட்டை ரோடு என்றால் சரிதான். மாத்தூர் கிராமத்திற்கும் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாக சொல்லும் இடத்திற்கும் இடையில் சுமார் 5கிமீ தூரம் இருக்கும். மாத்தூரில் டீக்கடை உள்ளது என்று சொன்னால் சரிதான். முள்ளூர் 3ரோடு சந்திப்பில் டீக்கடை உள்ளது என்றால் சரிதான். அந்த முள்ளூர் சந்திப்பை தாண்டி தான் ஐயங்கர் பேக்கரி கடை உள்ளதா என்று கேட்டால் முள்ளூருக்கு முன்பாகவே அந்த கடை உள்ளது. எதிரி கொடுத்தாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தை எத்தனை பேப்பரில் போலிசார் எழுதினார்கள் என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. அந்த சமயத்தில் சுமார் 6 போலிசார் வந்திருந்தார்கள். நான் 2பேப்பரில் மட்டும் கையெழுத்து செய்தேன். எழுதாத வெள்ளை பேப்பரில் போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை. அதன் பிறகு நான் காவல்நிலையம் செல்லவில்லை. டீக்கடை அருகே கத்தியை கைப்பற்றியது தவிர அதில்வேறு என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் காயம்பட்ட தேவேந்திரன் எனக்கு மாமா முறையாவார். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து எதிரி என்முன்பாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லைஎன்று சொன்னாலும் நான் போலிசாரிடம் ஆவணம் எதிலும் கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னாலும் எனது மாமா கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து போலிசார் என்னிடம் வெற்று பேப்பரில் கையெழுத்து பெற்றுக்கொண்டு அதில் பின்னிட்டு நிரப்பபட்டுள்ளது என்றால் சரியல்ல.

Sd/–திருப்பதி

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

**Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**புதுக்கோட்டை.**